கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசன பிரிவு
நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான
சர்வதேச பயிற்சி நிறுவனம் – கொத்மலை

KITI - IWM

# நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்காக பயிலுநர்களை சேர்த்தல் – 2026

கொத்மலை, நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் தேசிய தொழிற்றிறன் 06ஆம் நிலைக்காக அங்கீகரிக்கப்பட்ட முழுமையான அரச நிறுவனமாகும். இந்த நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருட முழு நேர நீர்ப்பாசன தொழில்நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜை, திருமணமாகாத அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த பயிற்சிக் கற்கை நெறி இரண்டு வதிவிட பயிற்சியுடனும் மற்றும் ஒரு வருட வெளிக்கள பயிற்சிக் காலத்தையும் கொண்டதாகும்.

**1) பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்ளல்**

**குறைந்தபட்ச தகைமை**

i விண்ணப்பதாரர் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் / தமிழ், ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணித பாடப்பரப்பில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

iii. விண்ணப்பதாரர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளில் 25 வயதிற்குக் குறையாதவராகவும் சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**2) பயிற்சிக்காக ஆட்சேர்க்கப்படும் முறை**

மேற்கூறிய தகைமைகளுக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்பு நடைமுறை பின்வருமாறாகும்:

i. தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர் ஒதுக்கப்பட்டுள்ள 1 1/2 மணித்தியால வினாத்தாள் சகிதம் தகுதிகாண் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

ii. எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்காக தெரிவு செய்யப்படுவர்.

**3) விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் விபரங்கள்:**

i. நிறுவனத்தின் இணையதளப் பக்கத்திற்கு (www.kitiiwm.gov.lk) பிரவேசித்து இயைபுடைய விண்ணப்பப் படிவத்தை Online முறையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

ii. விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

iii. விண்ணப்பப் படிவத்தை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 2026 ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதியாகும்.

iv. விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பெறுபேறுகளை உறுதி செய்து கொள்வதற்காக சாதாரண தரப் பரீட்சை சான்றிதழ், உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ்களின் Scan பிரதியொன்று (PDF) மற்றும் வயதை உறுதி செய்துகொள்வதற்காக பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் Scan பிரதியொன்றை (PDF) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**4) விசேட நிபந்தனைகள்**

i. பயிற்சி கற்கை நெறி ஆங்கில மொழி மூலத்தில் நடாத்தப்படும்.

ii. இந்த பயிற்சி கற்கை நெறிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான சகல செலவுகளும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன், தங்குமிட வசதிகள் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும். ஆனால் பயிற்சிக் காலத்தின்போது உணவு, மருத்துவம் மற்றும் ஏனைய சொந்த செலவுகளை பயிலுநர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

iii. தெரிவு செய்யப்படும் பயிலுநர்கள், பயிற்சி நிறுவனத்தின் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளுக்குக் கீழ்ப்படிந்து பயிற்சியை நிறைவு செய்வதோடு பயிற்சி காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்குக் கட்டுப்படுவதாகவும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

iv. தெரிவு செய்யப்படும் பயிலுநர்கள் மருத்துவப் பரிசோதனையொன்றுக்கு உள்ளாக வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்படும் நேரத்தில முழுமையான படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

v. பயிற்சிக் காலம் நிறைவடைவதற்கு முன், பயிற்சியிலிருந்து விலகுவதானால் அவர் அல்லது அவள் பொருட்டு அரசாங்கத்தினால் செய்யப்பட்ட செலவுகளை மீளளிப்பதற்கு கட்டுப்படுவதாகவும், அதற்காக பிணை உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

vi. பயிற்சிக் காலத்தின்போது நடாத்தப்படும் தவணை, வருடாந்த அதேபோல் பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் இறுதி எழுத்து மற்றும் செயல்முறை பரீட்சைகளில் சித்தியடையும் பயிலுநர்களுக்கு NVQ - Level 6 மட்ட டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் என்பதுடன் பயிற்சிக்கு இயைபான தொழிலொன்றை வழங்குவதற்கு இந்த அமைச்சு அல்லது பயிற்சி நிறுவனம் கடப்பாட்டைக் கொண்டிருக்காது.

vi. விண்ணப்பதாரர் வேறெந்த உயர்கல்வி கற்கை நெறியொன்றிற்காக பதிவு செய்திருத்தல் கூடாது.

**D.P. விக்கிரமசிங்க,**
**செயலாளர்,**
**கமத்தொழில், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.**